# இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி

# மற்றும்

# பயிற்சி நிறுவனம்

## ஆண்டறிக்கை

## 2015

இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்
“டில்கோ கோட்” கட்டடம்
புதிய கண்டி வீதி,
மாலம்பே

செயலாளர்
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
சம்பத்பாய
இல. 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**<u>ஆண்டறிக்கை 2015</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) உப பிரிவின்படி பின்வரும் ஆவணங்களை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

1. 2015 ஆம் ஆண்டுக்கான இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிருவாக அறிக்கை
2. 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் வருமான செலவு அறிக்கை, 2015 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான ஐந்தொகை மற்றும் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சல் கூற்று
3. 2015 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

இப்படிக்கு நம்பிக்கைக்குரிய

நவரத்ன பண்டார தென்னகோன்
தலைவர்
இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

# தொலைநோக்கு, செயற்பணி

# மற்றும்

# குறிக்கோள்

## தொலைநோக்கு

“இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கு ஏற்புடையதான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு பிராந்தியத்தில் மிகச் சிறந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையமாக விளங்குதல்”

## செயற்பணி

“இரத்தினக்கல், ஆபரணங்கள் கைத்தொழிலை மிகவும் போட்டி ரீதியிலான திறன்களை வளர்ப்பதன் ஊடாக எமது வாடிக்கையாளர்ளுக்கு உச்சமட்ட சேவையை வழங்குவதற்குரிய புதிய இரத்தினக்கல் படிமங்களை இனங்காண்பதற்கான ஆய்வு நடவடிக்கைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கான புத்தாக்கங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் பெறுமதியை அதிகரிக்கச் செய்வதற்கு ஏற்புடையதான கலைநுணுக்க மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த ஊழியர்களை உருவாக்குதல் அத்துடன் கைத்தொழிலுக்கு ஏற்புடையதான செயலமர்வுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி நூற்களை வெளியிடுதல் ஆகியன எமது செயற்பணியாகும்”

## குறிக்கோள்

“இலங்கையில் இரத்தினக்கல் கனிய வளச் சாத்தியத்தன்மை கொண்ட பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு நிலைபேறான விதத்தில் அகழ்ந்தெடுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் பற்றிய பயிற்சியுடன் கூடிய ஊழியர்களின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல்”

## <u>2. பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்</u>

**2.2 2015 ஆம் ஆண்டினுள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் உள்ளடக்கம் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| 01 | திரு. நவரத்ன பண்டார அலககோன் (தலைவர்) | 2015/01/22 திகதி தொடக்கம் இன்று வரை பணிப்பாளர் சபைத் தலைவர் |
| 02 | கலாநிதி வீ.எம்.டீ.எம்.கே. திசாநாயக்க | 2015/02/20 திகதி தொடக்கம் 2017/06/05 திகதி வரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் (புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியக சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் - தலைவர்) |
| 03 | திரு. எச்.கே.ஜீ.கே. நெம்மவத்த | 2015/02/20 திகதி தொடக்கம் 2017/05/021 திகதி வரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் (இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை - பணிப்பாளர் நாயகம்) |
| 04 | திருமதி கே.வீ.ஆர். மல்ஷா | 2015/03/18 திகதி தொடக்கம் இன்று வரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் (திறைசேரிப் பிரதிநிதி) |
| 05 | திரு. எம்.வீ.என்.எம். விக்கிரமசிங்க | 2015/06/25 திகதி தொடக்கம் 2017/03/30 திகதி வரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் (இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை - பணிப்பாளர் நாயகம்) |

**2.2 உயர் முகாமைத்துவம்**

கலாநிதி பிரஷான் பிரன்சிஸ் - நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்
( B.Sc.Special (Geo., SL) M.Sc. (Gem.,SL) M.Sc. (Petro.,Canada), Ph.D. (Gem.,SL), Dip. Mkt(UK), G.G.(GIA,USA),A.J.P. (GIA,USA), MGA(SL))

**3. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் பற்றி தலைவரின் மீளாய்வு**

**3.1 வாய்ப்புகள்**

- **ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தல்**

  நிறுவனத்தின் சேவைகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இத் துறையில் திறமைமிக்க ஊழியர்களுக்கு அதிக கேள்வி காணப்படுகின்றமையே இந்த அதிகரிப்பிற்கான காரணமாகும். இந்த கோரிக்கை அதிகரிக்க மற்றொரு காரணம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் நிறுவனம் வழங்கிய சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும். இந்தத் துறையில் அனைத்து அம்சங்களுடனும் தொடர்புடைய பயிற்சிச் சேவைகளை வழங்கும் வேறு எந்தவொரு நிறுவனமும் கிடையாது. அதேபோல், விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற வடக்கு கிழக்கு பகுதிகளின் ஆராய்ச்சி தேவைகளை நிறைவேற்ற வேறு எந்தவொரு சேவை வழங்குனரும் கிடையாது.

- **நிறைவேற்றப்படாத தேவைகள்.**

  இந்த துறையில் சேவை வழங்குநர்களால் பூர்த்தி செய்யப்படாத தேவைகளை எம்மால் இன்னமுமே காணக்கூடியதாக உள்ளது. இதில் இரத்தினக்கல் கண்டுபிடிப்பு, ஆரம்பநிலை இரத்தினக்கல் படிமங்களை இனங்காணல், ஆரம்பநிலை இரத்தினக்கல் படிமங்களை அகழ்ந்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்தின் புத்தாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் வடிவமைத்தல் மற்றும் கணினி உதவியுடனான வடிவமைத்தல்களுக்கான பயிற்சி ஆகியவை உள்ளடங்கும்.

- **தொழில்நுட்ப மேம்பாடுகள்**

  இரத்தினக்கல் படிமங்களை அகழ்ந்தெடுப்பதற்கான புதிய இயந்திர சாதனங்களைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவதற்கும் இரத்தினக்கற்களின் நிறத்தை மேம்படுத்துவதற்குமான வாய்ப்பும் உள்ளது.

- **நிறுவனத்தின் வளர்ச்சி**

  உலகம் முழுவதிலுமிருந்தான வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்குவதற்காக ஆசியா பசிபிக் பிராந்தியத்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பல்கலைக்கழகமாக இந் நிறுவனத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

- **ஏனைய வசதிகள்.**

  ஏனைய இடங்களில் கெவுடா வெப்பப் பரிகார நிலையத்தை நிறுவுதல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவுவதன் மூலம் இந்தத் துறையில் சேவை வழங்குவதற்கான ஒரு முன்னோடி நிறுவனமாக இது காணப்படுதல்.

- **கைத்தொழில் மேம்பாட்டுக்கான கூட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்**

  தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை போன்ற ஏனைய அரச நிறுவனங்களின் பல்வேறுபட்ட மேம்பாட்டு கருத்திட்டங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதோடு, சுற்றாடல் நிறுவனங்களோடு

இணைந்து இரத்தினக்கல் கைத்தொழில் துறைக்கான சுற்றாடல் நட்பு முறைகளுக்கு வழிவகுத்தல்.

- **விளம்பரம்.**

  இந்த நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆவணங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள், ஒலி/ஒளி விளக்க சமர்ப்பணங்கள் ஆகியன பயன்படுத்தப்படலாம்.

## 3.2. கட்டுப்பாடுகள்

- **உட்கட்டமைப்பு வசதிகள்**

  இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் நவீன வசதிகள் ஆகியவை பயிற்சி நிலையங்களில் போதுமான அளவு அபிவிருத்தி செய்யப்படவில்லை. இந்த பயிற்சி நிலையங்களுக்கு இத்தகைய கருவிகளை வழங்குவதன் மூலம் தொழில் வளர்ச்சிக்கான தேவையான அறிவையும் திறமையையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இரத்தினக்கல் பட்டைதீட்டல், இரத்தினக்கல் வெட்டல் அலகு மற்றும் ஆபரணங்கள் உற்பத்தி பயிற்சி நிலையத்திற்கு சுறுசுறுப்புமிக்க இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும் உலோகங்களின் தரத்தை நிர்ணயிக்க ஒரு அலகு நிறுவப்பட வேண்டும் மற்றும் அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வைரம் வெட்டுதல் இந்தக் கைத்தொழிலில் ஒரு சிறப்புப் பகுதியாக உள்ளதால் ஒரு பயிற்சி அலகு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அந்தக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- **பௌதீக வளங்கள்.**

  ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சித் துறையின் பணிகளை முன்னெடுக்கத் தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறை காணப்படலாம்.

- **தொழிலாளர்களின் தொழிலாளி மனநிலை / தாழ் மனப்பாங்குகள்**

  சமீப காலமாக ஊழியர்கள் எதிர்மறை மனப்பான்மையைக் கொண்டுள்ளனர்.

- **இணை அமைப்புகளால் வேலைகள் இரட்டிப்பாக செய்யப்படுதல்**

  உதா; எமது பயிற்சிகள், இரத்தினக்கல் பட்டைதீட்டல் சேவை ஆகியன

- **மனித வளம்.**

  இந்த நிறுவனத்தில் கல்வித் துறையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது தொழில்சார் கல்வித் திட்டங்களுக்கு இருக்கும் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய போதுமானதல்ல என்பது ஒரு அறியப்பட்ட உண்மையாகும். ஊழியர்களின் இந்த விடயமானது உள்நாட்டில் தொடர்புடைய பயிற்சி திட்டங்கள் இல்லாதுள்ள பின்னணியில் உருவாகியதோடு, துறைசார்ந்த கல்வியறிவுடைய ஊழியர்களின் பற்றாக்குறையானது சில விசேட காரணங்களாக உள்ளன. நிலைமைகளின் இறுதிமுடிவானது, கைத்தொழிலின் எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக அமையாது என்பதோடு, மேலும் பயிற்சிக்கான கோரிக்கைகளை குறைப்பதற்கான ஒரு

காரணமுமாகும். ஆகையால், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் கிடைக்கக்கூடிய நிறுவனங்களால் வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

- **நிதி வளங்கள்**
  ஒரு பரந்த அளவிலான நிறுவனங்களின் பணியைச் செய்ய போதுமான நிதிப் பங்களிப்பு திறைசேரியால் வழங்கப்படுவதில்லை. அத்தியாவசிய ஊழியர்களை பணியில் ஆட்சேர்ப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் திறைசேரியால் வழங்கப்படுவதில்லை.
- **வளர்ந்துவரும் தனியார் துறை பயிற்சி நிறுவனங்கள்.**
  கல்வி மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிற்துறைக்கான தனியார் துறையின் தலையீடு விருத்திசெய்யப்பட்டது.
- **கைத்தொழில் துறையில் சில பிரிவுகளுக்கான ஊக்குவிப்புகளின் பற்றாக்குறை.**
  உதா; இரத்தினக்கல் வெட்டும் பிரிவு சேவை
- **புவிச்சரிதவியலாளர் மற்றும் பயிற்சி நிபுணர்களின் பற்றாக்குறை.**
- **ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான உயர் பயிற்சிக்கான பயிற்சி வாய்ப்புகளின் பற்றாக்குறை மற்றும் பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சிப் பணியாளர்கள், பயிற்சி ஊழியர்கள் மற்றும் ஏனைய உதவி ஊழியர்களுக்கு மத்தியிலான இடைவெளி**

## 4. பணிப்பாளர்கள் அறிக்கை

### 4.1 குறிக்கோள்

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 25 (1) ஆம் பிரிவின்படி 1995 ஆம் ஆண்டு ஜுலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டது.

தேவையான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குவதன் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிற்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல், மேம்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியன நிறுவனத்தின் பிரதானமான குறிக்கோள் ஆகும்.

### 4.2 நிறுவனத்தின் அதிகாரங்கள்

1995 யூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பின்வருமாறு.

(i). இலங்கையில் இரத்தினக்கல் கனிப்பொருள் மற்றும் இரத்தினக்கல் படிமங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

i. இரத்தினக்கல் படிமங்களின் அமைவிடம்

ii. அவற்றை அடையாளம்காணல்

iii. இரத்தினக் கற்களின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் முறைகள்.

iv. நிறுவனம் சம்பந்தப்பட்ட ஏனைய துறைகள் தொடர்பான விடயங்கள்.

(ii). இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வளர்ச்சிக்காக இரத்தினக்கல் சுரங்க அகழ்வு, இரத்தினக்கல் பட்டைதீட்டல், ஆபரணங்கள் உற்பத்தி மற்றும் இரத்தினக்கல் பரிகரிப்பு முறை தொடர்பாகவும் கைத்தொழிலுக்குத் தேவையான இயந்திர சாதனங்களின் உற்பத்தி தொடர்பிலும் தொழில்நுட்ப மற்றும் பிற ஆலோசனைகளை வழங்குதல்.

(iii) பின்வரும் பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல்

i. இரத்தினக்கல் பட்டைதீட்டல், மெருகூட்டல் மற்றும் அடையாளம்காணல்

ii. ஆபரண உற்பத்தி

iii. வைரம் உள்ளிட்ட மாணிக்கவியல்

iv. ஆபரண வடிவமைத்தல்

v. வெப்பப் பரிகாரம் மூலம் இரத்தினக் கற்களின் வண்ண மேம்பாடு.

vi இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான பிற விடயங்கள்.

## 4.3 செயற்பாடுகள் மற்றும் வினைத்திறன்

### 4.3.1


நாட்டில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பற்றிய பயிற்சி நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கான முக்கிய நடவடிக்கைகள் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன்படி, இந்த நிறுவனம் அறிமுகப்படுத்திய இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கற்கைகளை பின்பற்றுவதில் இளைஞர்களிடையே ஈடுபாடு அதிகரிக்கின்ற போக்கைக் காணலாம்.

### 4.4.1 பயிற்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம் - 2015

**01.** பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்


மாணவர் பதிவு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதோடு, **2014** ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் **2015** ஆம் ஆண்டில் மாணவர் பதிவு **13%** அதிகரித்துள்ளது. இதன்படி **674** மாணவர்கள் இந்த ஆண்டுக்குள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

| பாடநெறி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| மாணிக்கவியல் | **134** |
| கெவுடா வெப்பப் பரிகரிப்பு | **96** |
| இரத்தினக்கல் பட்டைதீட்டல் மற்றும் மெருகூட்டல் | **190** |
| இரத்தினக்கல் வண்ணத் தரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் | **157** |
| ஆபரணங்கள் வடிவமைப்பு உருவாக்கம் | **37** |
| ஆபரணங்கள் உற்பத்தி | **42** |
| நவநாகரிக ஆபரண உற்பத்தி | **18** |
| **மொத்தம்** | **674** |




**2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பயிற்ச்சி பாடநெறிகளுக்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை மற்றும் மாணவர் செயலாற்றுகை**

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மாணிக்கவியல் | 36 | 103 | 38 | 120 | 134 |
| கெவுடா வெப்பப் பரிகரிப்பு | 38 | 51 | 105 | 86 | 96 |
| இரத்தினக்கல் பட்டைதீட்டல் மற்றும் மெருகூட்டல் | 108 | 83 | 81 | 122 | 190 |
| இரத்தினக்கல் வண்ணத் தரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் | 57 | 89 | 142 | 195 | 157 |
| ஆபரணங்கள் வடிவமைப்பு உருவாக்கம் | 31 | 34 | 46 | 27 | 37 |
| ஆபரணங்கள் உற்பத்தி | 58 | 39 | 46 | 49 | 42 |
| நவநாகரிக ஆபரண உற்பத்தி | - | 24 | - | | 18 |
| ஆபரணங்களுக்கு கல் பதித்தல் | - | 9 | - | | |
| மொத்தம் | 328 | 432 | 458 | 599 | 674 |



## 02. பயிற்சி திட்டம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள்

- மொரகஹகந்த, எலஹர, பகமூன ஆகிய இரத்தினக்கல் கிடைக்கின்ற இடங்களை உள்ளடக்கியவாறு புதிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பயிற்சி நிலையமொன்று குருவெலவில் நிறுவப்பட்டு இரத்தினக்கல் பட்டைதீட்டல் மற்றும் மெருகூட்டல் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடநெறிகளை கற்கின்ற பயிற்சிபெறுனர்கள் இரத்தினபுரியிலுள்ள கைத்தொழிற்சாலைகளுக்கு இணைக்கப்படுவார்கள் என்பதோடு, சிலர் சுயதொழில்வாய்ப்பாக இரத்தினக்கல் கைத்தொழிலில் ஏனைய உற்பத்தித் துறைகளுக்கு உதவும் பொருட்டு ஈடுபட்டனர்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலில் நவீன கைத்தொழில் மற்றும் கலைநுணுக்க பிரயோகங்கள் தொடர்பில் எமது நிறுவனத்தின் ஆசிரியர்களின் அறிவை இற்றைப்படுத்துவதற்காக இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. தற்போதுகூட ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்காக கற்பித்தலின் போது பயன்படுத்துகின்றனர்.
  - ✓ ஆபரண உற்பத்தி தொடர்பான தொழில்நுட்ப செயலமர்வு 2015.12.28 ஆம் திகதி மாலம்பே தலைமை அலுவலகத்தில் பயிற்சி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டது
  - ✓ இரத்தினக்கல் பட்டைதீட்டல் மற்றும் மெருகூட்டல் தொடர்பான தொழில்நுட்ப செயலமர்வு 2015.12.22 ஆம் திகதி மாலம்பே தலைமை அலுவலகத்தில் பயிற்சி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டது
- பிரதேச ரீதியில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் சூரியவெவ, நிவித்திகல, இரத்தினபுரி மற்றும் கம்பஹா பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. பல மாணவர்கள் இந்த விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் சேர்ந்து கொண்டுள்ளனர் என்பதோடு அவர்கள் பல்வேறு உற்பத்திப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.
- நிறுவனத்தின் புதிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொழில்நுட்ப ரீதியில் இற்றைப்படுத்துவதற்காக மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு NVQ அங்கீகாரம் பெறப்பட்டது.
  - ✓ இரத்தினக்கல் வடிவமைப்பு தொழில்நுட்பவியலாளர் பாடநெறி NVQ மட்டம் 4 க்கு அங்கீகாரம் பெற்றது.
  - ✓ ஆபரணங்கள் உற்பத்தி பாடநெறி NVQ மட்டம் 5 க்கு அங்கீகாரம் பெற்றது.

## 4.5 மனித வள அபிவிருத்தி

| பெயர் | பதவி | செயலமர்வு | நிறுவனம் |
|---|---|---|---|
| திரு. தனுஷ்க ரவீந்திரசிங்க | ஆராய்ச்சி அலுவலர் | வியாபார முன்மொழிவு வரைதல் | தேசிய விஞ்ஞான மன்றம் |
| திரு. ஜீ.ஜீ.எம்.எஸ். விக்கிரமசிங்க | | | |
| திருமதி சமுத்ர விஜேவர்தன | | | |
| செல்வி டப்.ஜீ.ஜே. செனெவிரத்ன | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | | |
| திருமதி எச்.எல்.எஸ்.யு.மதநாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | மனப்பாங்கு மற்றும் திறன் அபிவிருத்தி | மனித வள மேம்பாட்டு நிறுவனம் |
| திருமதி பி◌ீ.கே.விக்கிரமஆரச்சி | | | |
| திருமதி கே.ஜே.எச்.எஸ்ஜயசேகர | | | |
| திரு. ஜே.பீ.கே. சந்தீப் | | | |
| திருமதி எஸ்.கே.விதானகே | | | |
| திரு. அசோக ராஜரத்ன | முகாமைத்துவ உதவியாளர் | களஞ்சிய முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி | நிர்மாணிப்பு உபகரணங்கள் பயிற்சி நிலையம் |
| திருமதி. எச்.எல்.எல். ஜனித்ரி | முகாமைத்துவ உதவியாளர் | மனப்பாங்கு மற்றும் திறன் அபிவிருத்தி | மனித வள மேம்பாட்டு நிறுவனம் |
| திருமதி பீ.ஏ.கே.என். பெரேரா | | | |
| செல்வி என்.கே.ஆர். பிரசாதிகா | | | |
| திரு. எஸ்எல்.ஜே. முகந்திரம் | உதவிப் பணிப்பாளர் (நிதி) | விசேட தலைமைத்துவம் மற்றும் உண்மைப் பிரதிமை முகாமைத்துவம் | வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் |
| திரு. ஜே.பீ.கே. சந்தீப் | முகாமைத்துவ உதவியாளர் | விலைக்கேள்வி மதிப்பீடு பற்றிய நடைமுறை தோற்றப்பாடு | வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் |
| திரு. எச். மாபலகம | பயிற்சியளிப்பு அலுவலர் | பயிற்சியளிப்பதற்கு பயிற்றுவித்தல் | வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் |
| திரு. ஏ.எஸ். சமரவீர | | | |
| செல்வி நதீஷா நிவந்தி | முகாமைத்துவ உதவியாளர் | நிகழ்ச்சி முகாமைத்துவம் | வ/ப திறன் அபிவிருத்தி நிதியம் |


## ஆராய்ச்சி கருத்திட்டங்களின் செயலாற்றுகை

### 1. இலங்கையில் இரத்தினக்கல் படிமங்களின் ஆய்வு மற்றும் மதிப்பீட்டு கருத்திட்டம்.

உலகில் இரத்தினக்கல் வளம் நிறைந்த ஐந்து நாடுகளில் ஒரு நாடான இலங்கையின் நிலப்பரப்பில் 90% இரத்தினக்கற்களுக்கான உள்ளாந்த ஆற்றலைக் கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இயற்கைச் சூழலுக்கு குறைந்தளவு சேதம் ஏற்படக்கூடிய வகையில் அவற்றின் அகழ்வை மேற்கொள்ளல் நிகழ்காலத்தில் கைத்தொழில் எதிநோக்கியுள்ள முக்கியமான சவாலாகும்.

இதற்கானதொரு தீர்வாக இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் நிலைபேறான பயன்பாட்டின் பொருட்டு இரத்தினக்கல் படிமங்களை இனங்காண்பதற்கு, உள்ளார்ந்த ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கு மற்றும் பட்டியலிடுவதற்கு இலங்கையில் முறைசார்ந்த இரத்தினக்கல் படிமங்களை ஆய்வு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் இலங்கை பூராவும் இரத்தினக்கல் சாத்தியத்தன்மை வரைபடங்களை உருவாக்குதல் மூலம் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியாகும். 2008 ஆம் ஆண்டில் இது தொடர்பிலான விபரமானதொரு முன்மொழிவு அமைச்சரவைக்கு வழங்கப்பட்டதோடு அதற்குத் தேவையான நிதியங்களும் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இதற்கமைய இக்கருத்திட்டம் ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்தில் (வரைபடம் 01) அமுலிலுள்ளது.


2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் இக்கருத்திட்டம் மொனறாகலை மாவட்டத்தின் மெதகம, பிபிளை, சியம்பலாண்டுவ, படல்கும்புர மற்றும் மடுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அமுலிலிருந்ததோடு, படல்கும்பர பிரதேச செயலாளர் பிரிவின் கருத்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, இறுதி வரைபடமும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. (வரைபடம் 02). 2015 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது மெதகம, பிபிளை, சியம்பலாண்டுவ மற்றும் மடுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கருத்திட்டப் பணிகள் பூர்த்தியடைந்து, ஆரம்ப இரத்தினக்கல் சாத்தியத்தன்மை வரைபடம் மற்றும் கள ஆய்வுப் பணிகள் பல நிறைவு செய்யப்பட்டுள்ளன. (வரைபடம் 03). சியம்பலாண்டுவ மற்றும் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறிப்பிடத்தக்களவு இரத்தினக்கல் சாத்தியத்தன்மை இல்லையென்பது அவதானிக்கப்பட்டது.




வரைபடம் 01 ; கற்கைப் பிரதேசம்




வரைபடம் 02; படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் கள ஆய்வுப் பணிகள்





வரைபடம் 02; படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவின் இறுதி வரைபடம்



வரைபடம் 03; மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கள ஆய்வுப் பணிகள்




வரைபடம் 03-b மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் கட்டமைப்பு மற்றும் கள ஆய்வுப் பிரதேசம்





வரைபடம் 03 - C மெதகம பி. செ. பிரிவின் ஆரம்ப இரத்தினக்கல் சாத்தியத்தன்மை வரைபடம்





வரைபடம் 03 - d மெதகம பி. செ. பிரிவின் கள ஆய்வுப் பணிகள்




வரைபடம் 03 - f
சியம்பலாண்டுவ பி. செ.
பிரிவின் கள ஆய்வுப் பணிகள்






வரைபடம் 03 - e  சியம்பலாண்டுவ பி. செ. பிரிவின் கற்கைப் பிரதேசம்




வரைபடம் 03 - g  பிபிளை பி. செ. பிரிவின் இரத்தினக்கல் சாத்தியத்தன்மை



வரைபடம் 03 - h  பிபிளை பி. செ. பிரிவின் ஆய்வுப் பணிகள்


## 02). நிலைபேறான அபிவிருத்திக்கான சுற்றாடல் நேயம்மிக்க இரத்தினக்கல் சுரங்க அகழ்வு முறைகளை அறிமுகப்படுத்தும் கருத்திட்டம்

இரத்தினக்கல் சுரங்க அகழ்வு மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள் காரணமாக இயற்கைச் சுற்றாடல் நிலைமைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இவற்றைக் குறைத்துக்கொள்வதற்கும், அதற்கான தீர்வாக புதிய சுற்றாடல் நேயம்மிக்க சுரங்க அகழ்வு முறையியல்களை அறிமுகப்படுத்துதலும் எமது நிறுவனத்திற்குரிய பொறுப்பாகும்.

இக்கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதோடு, ஆரம்ப கள ஆய்வுப் பணிகள் மற்றும் கற்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (வரைபடம் 04). 2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய பாதகமான காலநிலை நிலைமையின் காரணமாக கருத்திட்ட அலுவல்களை நிறைவு செய்வதில் ஓரளவு பின்னடைவு ஏற்பட்டது.




வரைபடம் 04; ஆராய்ச்சிக் குழு கள ஆய்வுப் பணகளில் ஈடுபடல் மற்றும் இனங்காணப்பட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இடங்கள்




வரைபடம் 4 - பி - நுவரெலியா மாவட்டத்தின் கற்கைப் பிரதேசம்

**03)** **வெளியீடுகள்**

2015 ஆம் ஆண்டில் புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியக சரிதவியல் சங்கத்தின் 31வது தொழில்நுட்ப அமர்வின்போது "Appraisal of Gem Deposits in Badalkumbura Area, Sri Lanka" எனும் ஆராய்ச்சிப் பத்திரமொன்று வெளியிடப்பட்டது. (வரைபடம் ; 05)



*Proceedings of the 31st Technical Session of Geological Society of Sri Lanka*
*Published Online - 27th February 2015 (http://www.gsslweb.org)*
GSSL-2015-17

**Appraisal of Gem Deposits in Badalkumbura Area, Sri Lanka**

**R.M.R.S. Ratnayake[1,*], S.V.T.D. Raveendrasinghe[2], R.M.N.P.K. Jayasinghe[2], T.S. Dharmaratne[2] and H.M.R. Premasiri[3]**

*[1]Department of Geology, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.*
*[2]Gem and Jewellery Research and Training Institute, Malambe, Sri Lanka.*
*[3]Department of Earth Resources Engineering, University of Moratuwa, Moratuwa, Sri Lanka.*

**e-mail: rupikasandamali@gmail.com*

Badalkumbura divisional secretariat in the Monaragala district of the Uva province, Sri Lanka is one of the major gem occurrences in the south eastern slope of the central highlands. Kumbukkan oya and Menik ganga are the main surface drainages, supported by widely distributed perennial and seasonal network of tributaries. Geologically, the study area belongs to the Highland Complex and it is located close to the boundary of Highland and Vijayan Complexes. The area consists of high grade metamorphic rocks such as calc gneiss, garnet sillimanite graphite gneiss, biotite gneiss, and chanockite gneiss. Both primary and secondary gem deposits can be found in the area. This study focused to evaluate potentiality of gem deposits in the Badalkumbura divisional secretariat.

Field investigations were carried out to identify localized gem fields. Based on textural, structural, mineralogical and geological observations, gem fields were categorized into primary and secondary gem occurrences. Furthermore, exploratory auger sampling was carried out representing each gem field for further laboratory investigations. Selected gem bearing gravel layer was thoroughly washed and sieved. Mineral identification was carried out using gemmological microscope for 125 μm, 250 μm, and 500 μm grain sizes. The extent and distribution of the identified gem fields were demarcated and the gem potential map was prepared using GIS and Remote Sensing techniques.

According to the field observations, primary gem occurrences are commonly associated with impure calc gneiss and garnet sillimanite graphite gneiss. Due to higher weathering susceptible mineralogy of these host rocks tends to form residual gem deposits rich with spinal, garnets etc. These residual deposits contribute to form secondary gem deposits due to the process of transportation and deposition following the local drainage network. Therewith, the geomorphology is a governing factor to form such gem deposits at specific localized points or regions along the stream courses. According to the laboratory studies, 0.3% of yellow sapphire, 0.1% of blue sapphire, 0.5% of geuda (low quality corundum which can be turned into gem quality corundum by heat treatment), 4% of spinal, 2% of garnet, 1% of zircon and tourmaline are the main gem minerals found in these gem fields. Considering the results of both field and laboratory analysis, Badalkumbura divisional secretariat can be recognized as a high gem potential area.

17

வரைபடம் 05 ; "Appraisal of Gem Deposits in Badalkumbura Area, Sri Lanka" ஆராய்ச்சிப் பத்திரம்

**கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று**
**கடந்த 05 ஆண்டுகளுக்கான நிதித் தகவல்கள்**

| | 2011 | 2012 | 2013 | 2013 | 2015 |
|---|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | | | |
| திறைசேரி அளிப்புகள் மீண்டுவரும் | 27,420 | 29,629 | 32,113 | 43,357.0 | 47,081.0 |
| வேறு பங்களிப்புகள் | 12,500 | 13,853 | 13,020 | 13,862.9 | 26,447.4 |
| பாடநெறிக் கட்டணம் | 3,256 | 5,228 | 3,949 | 6,941 | 6,408.5 |
| சேவைக் கட்டண வருமானம் | 25 | 30 | 15 | - | - |
| புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியக சரிதவியல் ஆராய்ச்சிச் சேவைகளின் பெறுகைகள் | | | | | |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **43,201** | 48,740 | **49,097** | **64,161** | **79,936.9** |
| வேறு வருமானம் | 44 | 223 | 38 | 303 | 625.8 |
| வட்டி வருமானம் | 166 | 309 | 406 | 309 | 248.2 |
| வேறு பெறுகைகள் | 205 | 140 | 54 | - | 49.5 |
| **மொத்த வருமானம்** | **43,616** | **49,412** | **49,595** | **64,773** | **80,860.4** |
| கழி; - செலவுகள் | | | | | |
| ஏ. ஊழியர் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 30,328 | 35,403 | 37,260 | 44,558 | 57,081.4 |
| பி. தேய்மானம் மற்றும் பொதுச் செலவுகள் | 12,905 | 14,217 | 13,452 | 17,572 | 31,260.6 |
| **மொத்தச் செலவு** | **43,233** | **49,619** | **50,712** | **62,130** | **88,342** |
| **அதிகரிப்பு (குறைவு)** | **383** | **(207)** | **(1,117)** | **2,643** | **7,481.6** |

**2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கூற்று**

| விபரம் | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | | |
| மீண்டுவரும் அளிப்புகள் - திறைசேரி | | 47,081.0 | | 43,357. 0 |
| **வேறு வருமானம்** | | | | |
| பாடநெறிக் கட்டணம் | | 6,408.5 | | 6,941.2 |
| கெவுடா வெப்பமேற்றல் கட்டணம் | | | | |
| புவிச் சரிதவியல் ஆராய்ச்சிச் சேவை | | - | | - |
| வட்டி வருமானம் | | 248.2 | | 309.3 |
| பல்வேறு வருமானம் | | 625.8 | | 303.6 |
| **தொழிற்பாட்டு வருமானம் மொத்தம்** | | **54,363.5** | | **50,911.1** |
| கழி;- தொழிற்பாட்டுச் செலவு | | | | |
| ஆளணிக்கான சம்பளம் மற்றும் படிகள் | | 31,356.7 | | 23,092.9 |
| பயணச் செலவு | | 510.6 | | 279 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | | 1,382.8 | | 1,753.3 |
| பராமரிப்புச் செலவு | | 4,600.4 | | 2,676.2 |
| உடன்படிக்கைச் சேவைகள் | | 16,293.6 | | 14,588.1 |
| பயிற்சிச் செலவு | | 2,452.8 | | 1,321.1 |
| வேறு தொழிற்பாட்டுச் செலவுகள் | | 458.6 | | 759.7 |
| **தொழிற்பாட்டுச் செலவு மொத்தம்** | | **57,055.5** | | **44,470.3** |
| **தொழிற்பாட்டின் மூலம் பெற்ற அதிகரிப்பு/ (குறைவு)** | | **(2,692)** | | **6,440.8** |
| கழி- நிதிச் செலவு | | (25.9) | | (88.2) |
| மூலதனச் செலவுகளுக்கான ஏற்பாடு | 21,027.0 | | 7,382.5 | |
| வேறு பெறுகைகள் | - | | | |
| | 21,027.0 | | 7,382.5 | |
| கழி; - தேய்மான பதிவழிப்புச் செலவு | (25,840.2) | (4,813.20) | (11,092.2) | (3,709.7) |
| வேறு மூலதன முதலீட்டு ஏற்பாடு | 5,420.4 | | 6,480.4 | |
| கழி; - மூலதன முதலீட்டுச் செலவு | (4,800.9) | | (5,357.4) | |
| மூலதனச் சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் | (619.5) | | (1,123.0) | |
| வேறு மூலதன முதலீடுகளின் தேறிய செலவு தொழிற்பாடு அல்லாத வருமானம் | | **(4,839.10)** | | **(3,797.8)** |
| **கூட்டுக - சொத்துக்களை விற்றுப் பெற்ற வருமானம்** | | 49.5 | | |
| **அதி விசேட விடயங்களுக்கு முன்னர் அதிகரிப்பு/(குறைவு)** | | (7,481.60) | | 2,642.9 |
| அதி விசேட விடயங்கள் | | - | | |
| **காலகட்டத்திற்கான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | (7,481.60) | | 2,642.9 |
| **கூட்டுக** | | | | |
| முந்திய ஆண்டுக்கான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (61,463.97) | | (63,955.78) | |
| கழி;- முந்திய ஆண்டுக்கான சீர்செய்தல் | | (1,141.1) | | (151.1) |
| **தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | **(70,086.70)** | | **(61,464.0)** |

**இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின்**
**2015.12.31 ஆம் திகதிக்கான ஐந்தொகை**

| விபரம் | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் | 53,110 | | 69,830 | |
| பணிக்கொடை நதியம் | 252 | 53,362 | 1863 | 71,693 |
| **பிற்போடப்பட்ட செலவுகள்** | | | | |
| நவீனமயமாக்கல் மற்றும் ஒதுக்குச் செலவுகள் | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| கையிருப்பு மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 833 | | 833 | |
| கழி; - பதிவழிப்பதற்கான ஒதுக்குதல் | (648) | | (648) | |
| | 186 | | 186 | |
| விற்பனைக்கான புத்தகங்கள் | 24 | | 62 | |
| கடன் மற்றும் முற்பணம் | 1,984 | | 977 | |
| வங்கி வைப்புக் கணக்கு (குறுகிய கால) | 3,805 | | 3,610 | |
| வைப்புகள் | 2,700 | | 2,700 | |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்க கணக்குகள் | 615 | | 616 | |
| முற் கொடுப்பனவு | 198 | | 114 | |
| காசு மற்றும் வங்கி | 29,697 | 39,210 | 16,295 | 24,559 |
| **சொத்துக்கள் மொத்தம்** | | 92,573 | | 96,253 |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 358 | | 240 | |
| அட்டுறு செலவுகள் | 4,083 | | 2,364 | |
| கடன் கொடுத்தோர் | 119 | | 119 | |
| உழைக்கும்போது செலுத்தும் வரி | 4 | | 1 | |
| செலுத்த வேண்டிய நஷ்ட்ட ஈடு | 231 | | 231 | |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை நடைமுறைக்கணக்கு | 373 | 5168 | | 2,955 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | | |
| நிர்வாகக் கணக்குகள் (தே.இ.ஆ.அதிகார சபை.) | 3,179 | | 3,179 | |
| அளிப்புகள் - (வேறு நிறுவனங்கள்) | 232 | | 232 | |
| பணிக்கொடைக்கான ஒதுக்குகள் | 9,211 | | 9,908 | |
| ஊழியர் பாதுகாப்பு வைப்பு | 10 | | 10 | |
| இழப்பீடு செலுத்தல் | | 12,632 | | 13,329 |
| **பொறுப்புகள் மொத்தம்** | | 17,801 | | 16,285 |
| **தேறிய சொத்துக்கள் மொத்தம்** | | **74,772** | | **79,968** |
| **தேறிய சொத்துக்கள் / பங்குத் தொகுதி** | | | | |
| பங்கேற்பு மூலதனம் | | 50,000 | | 50,000 |
| ஒதுக்கு | | 4,500 | | 4,500 |
| வேறு பங்களிப்புகள் | | 850 | | 850 |
| ஊழியர் சுழற்சி நிதியம் | | 882 | | 834 |
| பிற்போடப்பட்ட வருமானம் ரூபா மூலதன ஏற்பாடு | | 88,626 | | 85,247 |
| திரண்ட நிதியம் | | (70,087) | | (61,464) |
| **தேறிய சொத்துக்கள் பங்குத் தொகுதிகள் மொத்தம்** | | **74,772** | | **79,968** |

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2015 | 2014 |
|---|---|---|
| **தொழிற்பாட்டுக் கருமங்களின் காசுப் பாய்ச்சல்** | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பெற்ற அதிகரிப்பு (குறைவு)** | (7,531.1) | 2,642.7 |
| **நிதியல்லாத கொடுக்கல் வாங்கல் பணம்** | | |
| தேய்மான ஒதுக்கு | 25,840.2 | 11,092.5 |
| மூலதனச் செலவு பதிவழித்தல் | 5,420.4 | 6,480.3 |
| பிற்போடப்பட்ட மூலதன வருமான சீர்செய்தல் | (26,447.4) | (13,862.4) |
| முந்திய ஆண்டின் சீர்செய்தல்கள் | (2,717.9) | (151.1) |
| கொடுப்பனவுகள் அதிகரிப்பு/குறைவு | 2,213.0 | (993.0) |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகளில் அதிகரிப்பு | 0 | 232.0 |
| ஊழியர் செலவின ஏற்பாடுகளில் அதிகரிப்பு | (697.0) | 524.0 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு | (1,249.0) | (2,703.0) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (அ)** | (2,450.9) | 3,262.0 |
| **முதலீட்டுக் கருமங்களின் காசுப் பாய்ச்சல்** | | |
| இயந்திர உபகரணங்கள் கொள்வனவு | (11,340.0) | (30,127.7) |
| பணிக்கொடை நிதியத்தின் அதிகரிப்பு | 1,611.0 | (93.0) |
| முதலீடுகளின் விற்பனையிலிருந்தான பெறுகைகள் | 48.0 | (6480.3) |
| ஒதுக்குகளில் அதிகரிப்பு | (5,420.4) | 15.0 |
| நிலையான சொத்துக்கள் விற்பனை | 1,128.0 | (21,599.0) |
| **முதலீட்டுக் கருமங்களின் தேறிய காசுப் பாய்ச்சல் (ஆ)** | (13,973.40) | (58,285.0) |
| **நிதியியல் கருமங்களின் காசுப் பாய்ச்சல்** | | |
| மூலதன அளிப்பு | 29,826.2 | 56,610.0 |
| அரசாங்கத்துக்கான விசேட அறவீடுகள் | | |
| **நிதியியல் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (இ)** | 29,826.2 | 56,610.0 |
| காசு மற்றும் நிதியியல் விடயங்களின் தேறிய அதிகரிப்பு/குறைவு (அ) (ஆ) (இ) | 13,402.0 | 1,587.0 |
| ஆரம்ப காசு/நிதியியல் மீதி | 16,295.0 | 14,708.0 |
| **ஆண்டின் இறுதியில் காசு/ நிதியியல் மீதி** | **29,697.0** | **16,295.0** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஜஈஎன்/டீ/ஜீஜேஆர்ரீஜ/1/15/3 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2016 நவம்பர் 30

தலைவர்
இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்.

**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் தலைவருக்கு 2016 செப்தெம்பர் 02 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

ஏனைய மூலதன மானியம் ரூபா 850,310 உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

மீளாய்வாண்டின்போது மானியமாக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 6,390,000 தொகையான 02 வாகனங்களின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கான காசு வெளிப்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03

2014 ஆம் ஆண்டின்போது மோட்டார் வாகனமொன்று மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கிரயம் மற்றும் திரண்ட

பெறுமானத்தேய்வு என்பன அகற்றப்படாமையால் சொத்துக் கணக்கினதும், திரண்ட பெறுமானத்தேய்வுக் கணக்கினதும் மீதி ரூபா 1,500,000 வீதம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தவறையும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று மீளாய்வாண்டின்போது அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்திற்குரிய ரூபா 4,500,000 தொகையான மீள்மதிப்பீட்டு இலாபத்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் அகற்றப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள், சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படவேண்டிய போதிலும் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யும் போது ஏற்படுகின்ற வழுவின் காரணமாக பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 3,142,066 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | பெறுமானத்தேய்வு அளவு |
|---|---|
| | ரூபா |
| 2011-2014 வரை பெறுமானத்தேய்வு செய்யப்படாத சொத்துக்கள் | (7,795,944) |
| மீளாய்வாண்டு - குறைவாக பெறுமானத்தேய்விடல் | (4,461,939) |
| அதிகரித்து பெறுமானத்தேய்விடல் | (14,650,330) |
| முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் மேலும் பெறுமானத்தேய்விடல் | 747,619 |
| | 3,142,066 |

(ஆ) ரூபா 399,006 கிரயமான பயிற்சி பாடநெறிகளின் போது பயன்படுத்தப்படுகின்ற இரத்தினக்கல் இருப்பை மதிப்பீடு செய்யாமல் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1999 ஆம் அண்டில் மானியமாக கிடைத்த தங்க ஆபரண இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அது காணாமல் போயிருந்ததன் காரணமாக கணிப்பிடப்பட்ட நட்டமான ரூபா 647,782 இருப்பில் குறைவடைந்ததன் காரணமாக உள்ளபடியான இருப்புகள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நுகர்வுப்பொருளின் இறுதி இருப்பு பௌதீக ரீதியில் கணிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் இறுதியிருப்பான ரூபா 833,428 தொகை மீளாய்வாண்டின் இறுதியிருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் றத்ன விஞ்ஞான பிரிவில் காணப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களில் 735 இருப்பு விடயங்கள் கணிப்பிடப்பட்டு நுகர்வுப் பொருள் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலையான சொத்தாக காண்பிக்கப்பட வேண்டிய கிரயம் ரூபா 300,916 தொகையான ஆராய்ச்சி உபரகணங்கள் மற்றும் உடைந்த நிலையில் காணப்பட்ட ரூபா 88,870 தொகையான 03 கையடக்கத் தொலைபேசிகள் என்பன நுகர்வுப் பொருள் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(உ) 13 சந்தர்ப்பங்களின் போது வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 70,225 தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் 02 வருட காலம் முதல் வங்கிக்கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1995 யூலை 28 ஆந் திகதிய 882 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தி | பணிப்பாளர் சபைக்காக ஐந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக மூன்று அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2004 யூலை 29 ஆந் திகதிய PED/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 3,805,467 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| | 13(8) ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் வழங்கப்பட்ட 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கை நிருவாக சபையினால் கவனத்தில் கொள்ளப்பட்டதன் பின்னர் எடுத்த உத்தேச படிமுறைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,481,616 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா

2,642,900 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 10,124,516 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. ஆளணி சம்பளங்கள், பராமரிப்புச் செலவினம் என்பன முறையே ரூபா 8,263,784 இனாலும் ரூபா 1,924,183 இனாலும் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளையும் பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2014 ஆண்டுகளில் நிதி மிகையொன்று பெறப்பட்டிருந்த போதிலும், 2012, 2013 ஆம் ஆண்டுகளிலும், மீளாய்வாண்டிலும் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது நிறுவகத்தின் பங்களிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் சிறிய அளவில் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், மற்றைய ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அது 26 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 49,715,257 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை நிர்வகித்தல், கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குதல் நிறுவகம் தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் போதும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் தாபிக்கப்பட்டு 20 வருடங்களை கடந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கட்டாயமாக பங்களிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் இரத்தினக்கல் கனிப்பொருள் தொடர்பான மெய்மையாய்வு மற்றும் ஆராய்ச்சியின் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் படிவுகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான நிறுவகத்தின் பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டணம் அறவிடப்படுகின்ற 10 பாடநெறிகளை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 03 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், முதல் அரையாண்டின் போது 200 மாணவர்களை இலவசமாக பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு மாணவரும் பயிற்றுவிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வகையில் புதிய திட்டமொன்றின் கீழ் இரண்டாவது அரையாண்டில் 190 மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டு 60 மாணவர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(ii) மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் 10 பிரதேச செயலாளர் பிரிவில் இரத்தினக்கல் படிவுகளை மதிப்பீடு செய்யும் செயற்திட்டத்திற்குரிய 500 கனியவள மாதிரிகளைப் பரீட்சிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 245 மாதிரிகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அது சதவீதமாக எடுப்போமாயின் 43 சதவீதப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iii) பூகோளவியல் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப கற்கை நடவடிக்கைகளின் கீழ் 10 வரைபடங்களை வடிவமைப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 வரைபடங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(iv) தோறமல்லி மற்றும் குறுவிந்த இரத்தினக்கல்களின் நிறங்களின் வெளிப்படையான மெருகூட்டும் வெப்பமேற்றுதல்/ஒளியேற்றுதல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 7,000,000 மற்றும் ரூபா 1,500,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் மூலதன மானியமாக ரூபா 153,789,130 தொகை கிடைத்திருந்த போதிலும் ரூபா 127,387,161 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 26,401,969 தொகை செலவிடப்படாது குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவையினை மதிப்பிட்டு அதன் பிரகாரம் முற்பணம் வழங்கப்படாமையினால் செலவினத்தை விஞ்சி 122 சதவீதம் முதல் 467 சதவீதம் வரை கூடுதலாக முற்பணம் வழங்கப்பட்ட 8 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) விரிவானதொரு மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் 25 இரத்தினக்கல் வெட்டும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 381,400 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக விபரமான விலைப்பட்டியல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சிரேஷ்ட முகாமைத்துவரொருவரால் 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,395,749 தொகையான தங்கம், வெள்ளி மோசடிக்குக்குரியதாக மேலும் அறவிடவேண்டிய ரூபா 1,495,745 தொகை மற்றும் அந்த உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்த வாகனக் கடன் ரூபா 56,250 தொகையும் அதற்குரிய வட்டியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்த தாபன செயல்நடைமுறைகளுக்காக இரண்டு வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்ததன் பின்னர் திருத்தங்கள் அனுப்பப்பட்டமையின் காரணமாக அந்த திருத்தங்கள் மேற்கொள்வது நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 317,000 தொகையான முற்பணம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெவுடா வெப்பமேற்றல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 10,977,344 தொகை செலவில் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அதிக வெப்பத்துடனான மின்சார அடுப்பு 2016 ஆம் ஆண்டின் யூன் வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இயந்திரத்தின் உத்தரவாதக் காலம் முடிவடைந்திருந்ததுடன் இயந்திரத்தை

பரீட்சித்ததன் பின்னர் அதற்குரிய செயற்பாடுகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தமையுமம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 12,309,013 தொகையான கிரயமொன்றைச் செய்து நிலத்தை துளையிடும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டு வரை காப்புறுதி செய்வதற்காக ரூபா 910,725 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த இயந்திரம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இரத்தினபுரி நிலையத்தின் வாடகைக் கட்டிடம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் கீழ்தளத்திலும் இரண்டாம் மாடியிலும் அதிகமான அளவொன்று பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக அந்த சேவையின் தரம் II இற்காக 2010 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட பெண் உத்தியோகத்தர் ஒருவருக்காக சேவை நிரந்தரமாக்காமலும், வினைத்திறமை காண் தடைப்பரீட்சை சித்தியடையாமலும் சம்பள அதிகரிப்பாக ரூபா 78,720 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சம்பள படிநிலையைவிட கூடிய சம்பள படிநிலையில் அமர்த்தியதன் காரணமாக 2009 மே முதல் 2015 யூலை வரை உத்தியோகத்தருக்கு ரூபா 619,646 தொகையான சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 78

நாட்கள் தாமதத்துடன் 2016 மே 17 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

---------------------------------

நிலையான சொத்துக்களை கைப்பற்றுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 22,170,000 தொகைக்குரிய முறையான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 கூட்டிணைந்த திட்டம்**

---------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கினை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டிற்காக நிறுவகத்தின் தலைவருக்கு பொறுப்புக் கூறுகின்ற கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் அவருக்கு உதவி புரிவதற்காக நிரந்தர கணக்காய்வு பதவியணியொன்று நியமிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளரின் கணக்காய்வு தொடர்பான தொழில் அறிவினை முன்னேற்றுவதற்காக போதியளவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டு வளங்கள் ஒதுக்கப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆட்சேர்ப்பு மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளுக்குரிய பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

பாதிடப்பட்ட வருமானத்தையும் செலவினைத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது சரியாகப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட எட்டு விடயங்களில் 16 சதவீதம் முதல் 213 சதவீதம்

வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்கீட்டு எண்ணக்கரு மற்றும் நியமங்களின் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நாட்குறிப்புக்கள் கணக்காளரினால் உறுதிப்படுத்தப்படுத்தப்படாமை |
| | (iii) நிலையான சொத்துக்கள் தொடர்பாக சரியாக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படாமை |
| (ஆ) பதவியணியின் நிர்வாகம் | (i) உத்தியோகத்தர்களின் வருகை, வெளியேறுகை மற்றும் விடுமுறைகள் தொடர்பாக உள்ளகக்கட்டுப்பாடு நலிவாக இருந்தமை |
| | (ii) அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல். |
| | (iii) சில உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) கொள்வனவு | கொள்வனவுத் திட்டத்துடன் தேவையான பிரகாரம் காலரீதியில் கொள்வனவு மேற்கொள்ளப்படாமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி